DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 218/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மணிவண்ணன் |
| **Father/Husband' Name** | ~ | |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 23.03.2026**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

1. எதிரி எனது வங்கிக் கணக்கில் ஏதேனும் பணம் செலுத்தி உள்ளாரா என்றால் இல்லை. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த வருமான வரி கணக்கு தாக்கலில் எதிரிக்கு கொடுத்த தொகை 14 லட்சம் தொடர்பாக குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை.நான் தாக்கல் செய்த கடனுறுதி சீட்டு ஆவணத்தில் தனியாக ரொக்கமாக எவ்வளவு தொகை கொடுத்துள்ளேன் என அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.நான் தாக்கல் செய்த பு.சா.ஆ. 9 ஆவணமான முத்திரைத்தாளை யார் வாங்கி வந்தார்கள் என்றால் நான் தான் வாங்கி வந்தேன். நான் தாக்கல் செய்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்த புகாரை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தீரா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்த புகாரில் இணைக்கப்பட்டுள்ள ஆவண பட்டியலில் எட்டாவது ஆவணமாக 07.9.2019 அன்று கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது

என்றால் சரிதான். ஆனால் அது அச்சுப் பிழை காரணமாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. 7 9 2017 தான் தேதியில் தான் கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தார்.

2. நான் எதிரிக்கு 2016 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் தான் வங்கி கணக்கு மூலமாக தொகை பரிமாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நவம்பர் டிசம்பர் மாதத்தில் கொடுத்த தொகைக்கு 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே முத்திரைத்தாளை பெற்று தவறாக அதில் கடனுறுதி ஆவணமாக மாற்றம் செய்து விட்டேன் என்றால் இல்லை அந்த முத்திரைத்தாள் ஆவணத்தை நான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்தேன். எதிரிக்கு எந்தெந்த தேதியில் 14 லட்சம் தொகையை கொடுத்துள்ளீர்கள் என்றால் 2017 ஆம் ஆண்டு எனது மனைவியின் சேமிப்பு பணம் மூலமாக எனது மனைவிதான் கொடுத்தார். தனி நபர் ஒருவர் ரொக்கமாக எவ்வளவு பணத்தை பரிமாற்றம் செய்யலாம் என்றால் தற்போது 2 லட்சம் வரையில் ரொக்கமாக பரிமாற்றம் செய்யலாம் அதற்கு முன்பாக எவ்வளவு இருந்தது என்று எனக்கு தெரியவில்லை. மேற்படி 14 லட்சம் தொகையும் பல்வேறு தவணைகளாக தான் கொடுத்துள்ளேன். எத்தனை தவணைகளில் எவ்வளவு வகைகள் கொடுத்துள்ளீர்கள் என்றால் எத்தனை தவணை தேதி என ஞாபகம் இல்லை.நான்கு, ஐந்து லட்சம் ஆக கொடுத்துள்ளேன். எதிரிக்கு தொகை கொடுக்கும் போது எனது மனைவி உடன் இருந்தாரா அல்லது எனது மனைவி தொகை கொடுத்தாரா என்றால் எனது மனைவி தான் தொகை கொடுத்தார். நான் எதிரியிடமிருந்து 18 லட்சம் தொகையை பெற்றுக் கொண்டு தவறாக 44 லட்சத்துக்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் இல்லை அது தவறானது.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறு விசாரணை இல்லை.**

**S/d xxxx**

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct

**S/d. C.P. Mullai Vanan**

**District Munsif-cum Judicial Magistrate,**

**Pallavaram**

.